(பொறுப்பு) வணிகவியல் குற்றப் புலனாய்வு பிரிவு, சென்னை-32

முன்னிலை: திரு.M.தில்லை நடராஜன்,

ந.க.எண்.அ1/பொ.கு.பிரிவு/8989/2017 நாள்:19.03.2021

அ.ஆ.எண்: 53/2021

சிறு தலைப்பு: காவல் - பொ.கு.பிரிவு, சென்னை – பணியமைப்பு – கருணை அடிப்படை பணி நியமனம் - கணினி விபர பதிவு ஊழியர் பதவியிலிருந்து இளநிலை உதவியாளராக பணி நியமனம் பெற்று பணிபுரிந்துவரும் திரு.A.பெலிக்ஸ் ராஜ், த/பெ மறைந்த முன்னாள் தலைமைக் காவலர் திரு.ப.அந்தோனி என்பவரின் தற்காலிக பணியினை இளநிலை உதவியாளர் பதவியில் வரன்முறைப்படுத்தி ஆணையிடுதல் - தொடர்பாக.

பார்வை:

1. அரசாணை (நிலை) எண்.80, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ-1) துறை, நாள் 02.03.2016.
2. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் (எம்) துறை, நாள் 01.08.2018.
3. தலைமையலுவலக மேல்வரைவு ந.க.எண்.21080/CAR1/2018, நாள் 25.09.2018

******

ஆணை:

இளநிலை உதவியாளர், திரு. A.பெலிக்ஸ் ராஜ் என்பவரின் தகப்பனார் மறைந்த தலைமை காவலர் 5853, திரு. ப.அந்தோனி என்பவர் கடந்த 21.09.1999 அன்று கோட்டூர்புரம் காவல் போக்குவரத்து துறையில் பணியிலிருக்கும் போது பணியிடை மரணமடைந்துள்ளார். அன்னாரின் மனைவி திருமதி. ஜோ. பாத்திமா மேரி, க/பெ ப.அந்தோனி என்பவர் கருணை அடிப்படையில் அவரது மகன் திரு. A.பெலிக்ஸ் ராஜ் என்பவருக்கு பணி நியமனம் கோரி 09.12.1999 அன்று காவல் ஆணையாளர், சென்னை பெருநகர அலுவலகத்தில் மனு சமர்ப்பித்துள்ளார். தலைமையலுவலக குறிப்பாணை ந.க.எண்.1433/CA1/2005-3, நாள் 13.07.2005ன்படி இவர் கருணை அடிப்டையில் கணினி விபர பதிவு ஊழியராக 17.10.2005 மு.ப காவல் ஆணையாளர், சென்னை மாநகர அலுவலகத்திற்கு நியமனம் செய்யப்பட்டுள்ளார். பின்னர், அரசாணை (நிலை) எண்.220, உள் (காவல் 15) துறை, நாள் 18.02.2016-ன்படி கணினி விபர பதிவு ஊழியர் பதவியில் 01.05.2007 முதல் அவரது தற்காலிக பணியினை, வரன்முறை செய்யப்பட்டு, 30.04.2009 பி.ப கணினி விபர பதிவு ஊழியர் பதவியில் தகுதிகாண்பருவம் முடித்து சென்னை தெற்கு மண்டல இணை காவல் ஆணையாளர் அலுவலக ஆணை ந.க.எண்.Estt.2/SZ/212/8126/2016, நாள் 06.07.2016-ல் ஆணையிடப்பட்டுள்ளது. இவர் தலைமையலுவலக குறிப்பாணை ந.க.எண்.84761/NGB 2(2)/2018, நாள் 02.08.2018-ன்படி இளநிலை உதவியாளராக பணி நியமனம் செய்யப்பட்டு 31.08.2018 பி.ப முதல் இவ்வலுவலகத்தில் பணிபுரிந்து வருகிறார்.

2) மேற்படி திரு. A.பெலிக்ஸ் ராஜ் என்பவரின் கருணை அடிப்படை பணி நியமனம் கோரும் மனுவானது அவரது தந்தை இறந்த தேதியிலிருந்து மூன்றாண்டுகளுக்குள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது, மேற்படி இளநிலை உதவியாளர் திரு. A.பெலிக்ஸ் ராஜ் என்பவரது பிறந்த தேதி 17.09.1980 ஆகும். கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரி மனு சமர்ப்பிக்கும் நாளில் இவருக்கு 19 வயது நிறைவடைந்துள்ளது, மேலும் அரசாணை (நிலை) எண்.560, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்(க்யூ-1) துறை, நாள் 03.08.1977-ன்படி மேற்படி இளநிலை உதவியாளர் கருணை அடிப்படை பணி வேண்டி மனு சமர்ப்பிப்தற்கு முன்னரே இளநிலை உதவியாளர் பணியிடத்திற்கான கல்வி தகுதியினை நிறைவு செய்துள்ளார்.

3) எனவே, பார்வை 2-ல் காணும் அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் (எம்) துறை, நாள் 01.08.2018 மற்றும் தலைமையலுவலக மேல்வரைவு ந.க.எண்.21080/CAR1/2018, நாள் 25.09.2018 ஆகியவைகளின்படி, 01.02.2016 வரை கருணை அடிப்பயையில் பணியமர்த்தப்பட்டு, எவ்வித விதித்தளர்வுகளும் மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு தேவைப்படாததாலும், இளநிலை உதவியாளர், திரு. A.பெலிக்ஸ் ராஜ் என்பவரின் தற்காலிக பணியினை அவர் இளநிலை உதவியாளராக பணிக்கு அறிக்கை செய்த நாளான 01.09.2018 மு.ப. (31.08.2018 பி.ப.) முதல் அவர் உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு பணி வரன்முறைப்படுத்தி ஆணையிடப்படுகிறது. மேற்படியாளர் பணிவரன்முறைப்படுத்தப்பட்ட நாள் முதல் தொடர்ந்து மூன்றாண்டுகளுக்குள் இரண்டு ஆண்டு காலம் பணியினை திருப்பதிகரமாக நிறைவு செய்வதுடன் பவானி சாகர் அரசு அலுவலர் அடிப்படை பயிற்சியினையும் நிறைவு செய்து தேர்ச்சி பெறும் வரை தகுதிகாண் பருவத்தினராக கருதப்படுவார்.

4) இவ்வாணையினை பெற்றுக்கொண்டமைக்கு ஏற்பளிக்கவும்.

M. தில்லை நடராஜன்,
காவல் கண்காணிப்பாளர்,
பொருளாதார குற்றப் பிரிவு (அலகுகள்),
(பொ) வ.கு.பு.பிரிவு, சென்னை-32.

பெறுநர்:
திரு. திரு. A.பெலிக்ஸ் ராஜ், இளநிலை உதவியாளர், பொ.கு.பிரிவு, சென்னை.

நகல்:
காவல்துறை இயக்குநர் அலுவலகம், தமிழ்நாடு, சென்னை-4.
அலுவலக ஆணைப்புத்தகம், பணிப்புத்தகம் மற்றும் இருப்புக் கோப்பு

//உண்மை நகல் உத்தரவுப்படி//

நிர்வாக அதிகாரி,
பொ.கு.பிரிவு, சென்னை-32.
M.Bhi
19/03/2021